Registered as a NewsPaper

விலை: 15.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கம்-04

நாதம் 20 | திருவள்ளுவர் ஆண்டு- 2039 | 02-03-2009 | திங்கட்கிழமை | ஓசை-13

தமிழீழவைப்பகம்
Bank Of Tamileelam



அழுதம்
தமிழமுதம் கணக்கில்
அதிகம் சேமிப்பீர்...
அதிக பரிசில்களைப்
பெற்றிடுவீர்!

தமிழீழவைப்பகம் தமிழரின் காப்பகம்

# தமிழீழத்தின் தார்மீக உரிமைக்காக மொரீசியசில் பட்டினிப் போராட்டம்

தமிழீழ மக்களுக்கு தார்மீக உரிமைக்குரல் கொடுத்து மொரீசியஸ் தேசத்தில் தமிழ் உறவுகளால் பட்டினிப்போராட்டம் நடாத்தப்பட்டுள்ளது. இப்போராட்டத்தில் மொரீசியசிலுள்ள புலம்பெயர்வாழ் தமிழர்கள் கலந்துகொண்டனர். இவர்கள் சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிராக சுலோகங்களைத் தாங்கியிருந்தனர்.

அத்துடன் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமை குறித்தும் சுலோகங்களைத் தாங்கியிருந்தனர். இந்தப் போராட்டம் குறித்த விளக்கங்களும் மொரீசியஸ் மக்களுக்கு புலம்பெயர்வாழ் தமிழ்மக்களால் எடுத்துவிளக்கப்பட்டுள்ளது.

தமிழீழ மக்களுக்கு ஆதரவாக உலகெங்கும் பரவலாக முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டங்களின் ஓர் அங்கமாகவே இப்போராட்டம் நடாத்தப்பட்டதாகவும், தமிழீழ மக்களுக்கு உரிமைகள் கிடைக்கும்வரை பல்வேறு வகையான போராட்டங்கள் தொடர்ந்து நடத்தப்படுமெனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## படைக்கு குருதி திரட்ட பொய் கூறும் அரசு

(கொழும்பு)

வன்னி மக்களுக்கெனத் தெரிவித்து தமிழர்களின் குருதியை சிறிலங்காப் படையினருக்குத் திரட்டும் நடவடிக்கையில் சிறிலங்கா அரசு ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பாக வானொலிகள், தொலைக்காட்சிகள் மற்றும் ஏனைய ஊடகங்கள்வாயிலாகப் பிரச்சாரம் செய்யப்பட்டு குருதி திரட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாறு திரட்டப்படும் குருதி வன்னிக்களத்தில் புலிகளின் தீவிர

(04ஆம் பக்கம் பார்க்க)

## திருமலைக்கு சிகிச்சைக்கு செல்வோரில் 32 வீதத்தினர் வதைமுகாம்களில்

(கொழும்பு)

சிறிலங்காப்படையினரின் கொடூரத் தாக்குதல்களில் படுகாயமடைந்து மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலைக்குக் கொண்டுசெல்லப்பட்ட 32 வீதத்தினர் வதைமுகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள்.

வவுனியா அரச அதிபர் செயலகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. நெலுக்குளம் முகாமிற்கு இவர்கள் அனுப்பப்பட்டுள்ளார்கள். என அரச அதிபர் செயலகம் தெரிவித்துள்ளது.

மேலதிக சிகிச்சை பெறச் சென்றவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இந்த முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள்.

அத்துடன் திருகோணமலையிலுள்ள பாடசாலை ஒன்றில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு மருத்துவமுகாம் என்ற படையினரின் வதைமுகாமில் வன்னியிலிருந்து கொண்டுசெல்லப்படுபவர்களில் பெருமளவானோர் வைக்கப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை வழங்கப்படுகின்றது.

மிக மோசமான உயிராபத்தில் உள்ளவர்கள் மட்டும் சிங்களப் பகுதி மருத்துவமனைகளில் உள்ளார்கள். இவர்கள் எவருடனும் தொடர்புகொள்ளமுடியாதவாறு சிறிலங்காப்படையினர் அனுமதி மறுத்துள்ளார்கள். இதில் ஏனையவர்கள் இந்தப் படையினரின் நலன்புரிநிலைய வதைமுகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள்.

## வீரவணக்கம்

25.01.2009 அன்று பத்துப் போராளிகள் வீரச்சவடைந்துள்ளனர்.

**மேஜர் அல்லி**
(இராமசாமி சுமத்திரை, யாழ்.மாவட்டம், த.மு.இராமநாதபுரம், வட்டக்கச்சி, கிளிநொச்சி. வேறு முகவரி- உடையார்கட்டு வடக்கு முல்லைத்தீவு)

**கப்டன் ஈழமணி**
(குமார் பாலேந்திரன், 02 ஆம் யுனிற், தருமபுரம், கிளிநொச்சி)

**கப்டன் ஆரதி**
(வேலு சுபாஜினி, இல-07, அக்கராயன் குளம், கோணாவில், கிளிநொச்சி)

**மேஜர் தன்மொழி**
(குமாரகுலசிங்கம் திலீபன், யாழ்.மாவட்டம், த.மு-விக்கி குடியிருப்பு, வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு)

**02 ஆம் லெப்.பரணி**
(சற்குணராசா அனித்தா, கள்ளப்பாடு வடக்கு, முல்லைத்தீவு)

**லெப்.இசையழகு**
(அந்தோணிப்பிள்ளை சுரேஸ், மட்டு மாவட்டம்,த.மு-வவுனியா மாவட்டம்)

**லெப்.அகிலரசன்**
(சண்முகம் சசிகரன், 02 ஆம் வட்டாரம் கோம்பாவில், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, த.மு-ஆ பகுதி தேவிபுரம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு)

**கப்டன் நிலவன்**

(04ஆம் பக்கம் பார்க்க)

வன்னிக்களத்தில் புலிகளின் தீவிர பகுதியினர் இந்த முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். வதைமுகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள்.

(04ஆம் பக்கம் பார்க்க)

# வித்தியாசமான இரசாயனக் குண்டுகளே பொதுமக்கள்மீது நேற்று வீசப்பட்டன

## முல்லை மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்



படப்பிடிப்பு:கயித்தாம்பிள்ளை

வித்தியாசமான இரசாயணக்குண்டுகளே மாத்தளனில் நேற்றையதினம் வீசப்பட்டுள்ளன. இதனால் கொல்லப்பட்டவர்கள் எரியுண்டதுடன் காயமடைந்தவர்கள் எரிகாயங்களுக்குள்ளாகினரென முல்லை மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் து.வரதராஜன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறிலங்காப் படையினர் நேற்று பாதுகாப்பு வலயப்பகுதியில் நடத்திய எறிகணைத்தாக்குதலில் காயமடைந்த 54 பேர் கொண்டுவரப்பட்டனர். இவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான முக்கிய மருந்துவகைகள் எம்மிடம் இல்லாததால் அவர்களில் ஐந்துபேர் அநியாயமாக உயிரிழந்துள்ளனர். காயமடைந்தவர்களில் முதியவர்கள், பெண்கள், சிறுவர்கள் ஆகியோர் அடங்கியுள்ளனர்.

நேற்று குண்டு வீசப்பட்ட இடத்திற்கு நான் சென்று வந்தேன். இதுவரை சிறிலங்காப் படையினர் ஏவிய குண்டுக

(04ஆம் பக்கம் பார்க்க)

# மாத்தளனில் எறிகணைவீச்சில் ஐவர் எரிந்து மரணம்

(மத்தளன்)

மாத்தளன் பகுதியில் நேற்று மாலை 6.00 மணியளவில் சிறிலங்காப் படையினர் நடத்திய கோரமான எறிகணைத்தாக்குதலில் ஐவர் உடல் எரிந்து உயிரிழந்துள்ளதுடன் 20 பேர் காயமடைந்துள்ளனர். குணசிங்கம் (வயது 80), வண்ணமுகில்மாமா (வயது 45), மதுசன் (வயது 13) ஆகியோர் உட்பட ஐவர் கொல்லப்பட்டுள்ளனர்.

# அதிகளவு தமிழ் இளைஞர்கள் இலங்கையில் படுகொலை

## அமெரிக்காவின் மனித உரிமைகள் ஆண்டறிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அதிகளவில் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் தெற்காசிய நாடுகளுக்கான 2008 ஆம் ஆண்டிற்கான மனித உரிமைகள் தொடர்பான அறிக்கை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

நீண்ட விளக்கங்களுடன் இந்த அறிக்கை வெளிவந்துள்ளது. இந்த அறிக்கையில் இலங்கையில் அதிகளவில் தமிழ் இளைஞர்கள் கொல்லப்படுகின்றார்கள். இலங்கையில் 16 வீதத்தினராக இருக்கின்ற தமிழ் மக்களுடைய தொகையில் அதிகளவில் தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

இதில் சிறிலங்கா அரசுடன் இணைந்து இயங்குகின்ற குழுக்களான ஈ.பி.டி.பி., ரி.எம்.வி.பி. ஆகிய குழுக்களுடைய நடவடிக்கைகள் அதிகமாக இருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னிப்பகுதியில் சிறிலங்காப் படையினரால் நாள்தோறும் மக்கள் கொல்லப்பட்டு வருகின்றநிலையில்

(04ஆம் பக்கம் பார்க்க)



**வந்த பகைவனால் கண்ணீரே மிச்சம் - அவனைக் கொன்றால் தானே தீரும் அச்சம்.**


ஓராண்டு
நினைவில்...
தாய் மடியில்:
30.07.1987
தாய் மண்ணில்:
03.03.2008

# லெப்.அகமகன்

## யோகேஸ்வரன் ரமேஸ்

### யாழ் மாவட்டம்


**தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காகவும், கௌரவத்திற்காகவும், பாதுகாப்பிற்காகவும் தமது இன்னுயிரை அர்ப்பணித்துள்ள மாவீரர்களான தியாகிகள், காலங்காலமாக எமது இதயக்கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்.**

———————————தேசியத் தலைவரின் சிந்தனைத் துளியில் இருந்து-

தகவல்: குடும்பத்தினர்

# வீரச்சாவு அறிவித்தல்

## போருதவிப்படைவீரர் சிறிதரன் (சிறி)



ஜெயந்திநகர் கிளிநொச்சியை நிரந்தமுகவரியாகவும் 7ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பில் வசித்து வந்தவரும் தற்போது அம்பலவன்பொக்கணை சாள்ஸ் மண்டபம் அருகாமையை இடைக்கால முகவரியாகவும் கொண்ட போருதவிப்படைவீரர் சிறிதரன் (சிறி) என்றழைக்கப்படும் துரைராசா சுகந்தராஜ் 28.02.2009 அன்று வீரச்சாவடைந்துள்ளார். இம்மாவீரர் காலஞ்சென்ற துரைராசா தவபாக்கியசிகாமணி மண இணையரின் பாசமிகு மருமகனும் நந்தினியின் பாசமிகு கணவரும் நளாயினி(சுவிஸ்),நவஜீவன்(லண்டன்) நவராஜ்(கொழும்பு பல்கலைக்கழகம்) நளினி ஆகியோரின் பாசமிகு தம்பியும் சாந்தகுமார் , சிவகுமார்,சந்திரகுமார், ஆகியோரின் மைத்துனரும் ஹெரினா,தீபிகா. துஷாந்தன்,றுக்ஷனா, அனுஷன்,றக்ஷனா, ஆகியோரின் பாசமுள்ள மாமனாரும் ஆவார். இம்மாவீரரின் வித்துடல் புனித விதைக்குழியில் முழுப்படைய மதிப்புடன் விதைக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினா, நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:மனைவி நந்தினி,

மாமா சந்திரராசா குடும்பம்.



### சிந்தனைக்கு

சுதந்திரம் என்பது பேரம் பேசிப் பெற்றுக்கொள்ளும் ஒரு வியாபாரப் பண்டமல்ல. அது இரத்தம் சிந்தி பெற்றுக்கொள்ளப்படும் ஒரு புனிதமான உரிமை.

தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 02.03.2009
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## வரும்முன் காப்போம்!

சிறிலங்கா இராணுவம் வன்னியில் மேற்கொண்டு வரும் பாரிய இராணுவ நடவடிக்கையானது – நேரடியான இன அழிப்பு நடவடிக்கையாக மட்டுமல்லாது பெரும் சூழலியல் சுகாதார நெருக்கடியைத் தோற்றுவித்து பெரும் அவலத்தை ஏற்படுத்தத்தக்கதுமாகும். இவ்விடயத்தில் மக்கள் விழிப்புக்கொள்ளாதுபோனால் பெரும் நெருக்கடிக்கு முகங்கொடுக்கவேண்டியது தவிர்க்கப்படமுடியாது போய்விடும். ஆகையினால் இவ் அவலம் வரும் முன் தவிர்க்கப்படல்வேண்டும்.

வன்னியில் பரந்துபட்டு வாழ்ந்துவந்த மக்கள் இன்று மிகவும் ஒடுங்கிய பகுதிக்குள்– அதுவும் மக்கள் வாழ்விற்குப் பொருத்தப்பாடற்ற பகுதிகளில் வாழவேண்டியதான நிர்ப்பந்தத்திற்குள் உள்ளாக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக மக்கள் பௌதீகச் சூழலினாலும் மனித நடவடிக் கைகளினாலும் பெரும் சூழலியல் சுகாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது.

இவற்றில் முக்கியமானவையாகப் பொருத்தமான குடியிருப்பு இன்மை, போதிய அளவிலானதும் சுத்தமானதுமான நீரில்லாமை, மலசலகூட வசதியின்மை என்பன தலையான பிரச்சினையாக சூழலில் சுகாதாரத்தில் பாரிய பாதிப்பை விளைவிப்பவையாக

# இடம்பெயர்ந்த உணவகங்கள் பலவற்றில் சுகாதார நடைமுறைகள் இல்லை

(இரணைப்பாலை)

சிறிலங்காப் படை நடவடிக்கைகள் காரணமாக பலமுறை இடம்பெயர்ந்து தற்போது பொக்கணை மாத்தளன், வலைஞர்மடம் பகுதிகளில் செயல்படும் பெரும்பாலான உணவகங்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதநிலை காணப்படுகின்றது.

உணவகங்கள் செயற்படும் இடங்கள் வீதிக்கு மிக அருகாக இருப்பதுடன் பல உணவகங்கள் உணவுப்பொருட்களைத் திறந்த பெட்டிகளில் வைத்து விற்பனை செய்வதினைக் காணமுடிகிறது. இவ்வாறாக விற்பனைக்கு வைக்கப்படும் உணவுகளில் வீதிப்புழுதிகள் படிவதுடன் இலையான்கள் மொய்த்து வருவதையும் அவதானிக்கமுடிகிறது. இதனால் இவ்வுணவுப் பொருட்களை உண்ணுவோர் நோய்வாய்ப்பட நேரிடும் அபாயம் உள்ளது. (து)

## சுகாதார நடைமுறைகளை பேணாததால் சிறுவர்களுக்கு வயிற்றோட்டம்

(நமது செய்தியாளர்)

இடம்பெயர்ந்த மக்கள் சுகாதார வழிமுறைகளைக் கடைப் பிடிக்காத காரணத்தினாலே சிறுவர்களுக்கான வயிற்றோட்ட நோய் ஏற்பட்டுவருவதாக மக்களால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்து தறப்பால்களில் தங்கியுள்ள மக்கள் மலம் கழிக்கும்போது சுகாதார முறையின்றி கடற்கரையில் மலம் கழிப்பதாலும், சிறுவர்களின் மலங்களை வீடுகளுக்கருகில் வெட்டிப் புதைக்காமல் விடுவதாலுமே தற்போது பல தொற்றுநோய்கள் ஏற்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்த மக்களின் நலன்களில் அக்கறை காட்டிவரும் அமைப்புக்கள் இதுவிடயத்தில் கவனமெடுத்து மக்களுக்கு சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்களைத் தொற்று நோயிலிருந்து பாதுகாக்க முன்வரவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (46)

## வலைஞர்மடம் பகுதியில் தேங்காய் ஒன்று 110 ரூபா

(நமது செய்தியாளர்)

மக்கள் இடம்பெயர்ந்து மிகவும் செறிவாக வாழும் வலைஞர்மடம் பகுதியில் தேங்காய் ஒன்று 110.00 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. இப்பிரதேசத்தில் தென்னைமரங்கள் இல்லாத நிலையினால் வேறு இடங்களிலிருந்து எடுத்துவந்தே இப் பகுதியில் தேங்காய் விற்பனை செய்யப்பட்டுவருகின்றது. ஓரளவு பெரிய-தேங்காய் 110 ரூபா வரை நேற்று விற்பனை செய்யப்பட்டது.

இடம்பெயர்ந்து பல்வேறு நெருக்கடிகளுக்கும் மத்தியில் இப்பகுதியில் வாழ்ந்துவரும் மக்கள் இதனால் தமது சமையல் தேவையான தேங்காயினைக் கொள்வனவுசெய்வதில் பெரும் இடர்களை எதிர்கொண்டுவருகின்றனர். இதனைவிட உயர்வான இந்த விலையிலும் இப்பகுதியில் போதியளவு தேங்காய்கள் இல்லாதநிலையும் காணப்படுகின்றது.

பல்வேறு பகுதிகளிலிருந்தும் இடம்பெயர்ந்து இப்பகுதியில் வாழ்ந்துவரும் மக்கள் இதனால் சமையல் தேவைகளுக்கு தேங்காயைப் பயன்படுத்தாமல் உணவுகளைத் தயாரித்து உண்டு வருவதனையும் அவதானிக்கமுடிகின்றது. (ஜெ)

# சிறிலங்காவில் பொருண்மிய நெருக்கடி 56ஆயிரம் பேருக்கு வேலையிழப்பு

(கொழும்பு)

சிறிலங்காவில் பொருண்மிய நெருக்கடி காரணமாக 56 ஆயிரம் பேர் வேலையை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறிலங்காவில் பொருண்மிய வீழ்ச்சியும், பொருண்மிய நெருக்கடியும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக அதிகளவில் வேலை வாய்ப்பின்மை ஏற்பட்டுள்ளது. இந்த வேலைவாய்ப்பின்மையால் இந்த ஆண்டில் 56 ஆயிரம்பேர் வேலைகளை இழந்துள்ளனர். இதேவேளை இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படுமென்றும் இது சிறிலங்காவினால் தவிர்க்கமுடியாத ஒரு சூழ்நிலையாகக் காணப்படுகின்றதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தலைமைப் பதவியிலிருந்து ரணில் நீக்கப்படுவார்?

■ சிரேஸ்ட உறுப்பினர்கள் தகவல்

(கொழும்பு)

## உப்புவெளியில் சுற்றிவளைப்பு 5 தமிழ் இளைஞர்கள் கைது

(திருமலை)

திருகோணமலை உப்புவெளியில் சிறிலங்காக் காவல்

சுகாதாரத்தில் பாரிய பாதிப்பை விளைவிப்பவையாக மாறியுள்ளன.

தற்போதைய சூழ்நிலையில் இவற்றிற்கான பரிகாரம் என்பது மிகவும் சிக்கலானது, கடினமானது என்பதும் உண்மையே. ஆனால் தற்போதைய சூழ்நிலையில் ஏற்படத்தக்கதான தாக்கத்தைத் தவிர்த்துக்கொள்ளவும் அவற்றால் ஏற்படத்தக்கதான பேரவலத்தைத் தடுப்பதற்கான மார்க்கங்கள் என்பன இல்லாமலும் இல்லை.

இதன் முதற்கட்டமாக மக்கள் இவை தொடர்பான விழிப்புணர்வும் பொறுப்புணர்வும் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். ஒரு சூழலியல் நெருக்கடியில் மக்கள் எவ்வாறு வாழுதல் வேண்டும் என்பது சுகாதார நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்ட பலதரப்பாலும் பல தடவைகள் வலியுறுத்தப்பட்டதுண்டு.

எடுத்துக்காட்டாக நீர் தொடர்பான விடயத்தில் கொதித்தாறிய நீரைப் பருகுதல், வடிகட்டிய நீரைப் பருகுதல், உணவைச் சூடாகவே உட்கொள்ளுதல், உணவுப் பதார்த்தங்களை ஈ போன்றவை மொய்க்காது பாதுகாத்தல் போன்ற வழிமுறைகள் ஒருபுறத்தில் வலியுறுத்தப்படுகையில் மறுபுறத்தில் மலங்கழிக்கும் வழிமுறைகள் மலங்கழித்ததன் பின்னரான செயற்பாடுகள் என்பனவும் வலியுறுத்தப்பட்டு கூறப்பட்டுவருவதுண்டு.

மேற்கூறப்பட்டவை தனி நபர்கள் தமது சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையாகும். ஆனால் இது மட்டும் எமது சூழலையோ சுகாதாரத்தையோ பேணுவதற்கோ பாதுகாப்பதற்கோ போதுமானதொன்றல்ல. எமது சுகாதாரத்தைப் பாதுகாக்க – எமது சுற்றத்தினதும் சூழலினதும் சுகாதாரம் பேணப்படுதல் வேண்டும்.

இவ்விடயத்தில் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் பொறுப்புணர்வு அவசியம். தமது சுகாதாரத்தைப் பேணும்போது ஏனையவரினதும் சூழலும் சுகாதாரமும் பேணப்படும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இவ்விடயத்தில் பொறுப்புணர்வு இன்றிச் செயற்படின் சுற்றத்தார் பாதிக்கப்படுவது மட்டுமல்ல சுழற்சிமுறையில் அவரையே அது பாதிப்பிற்குள்ளாக்குவது தவிர்க்கப்பட முடியாதுபோய்விடும்.

ஆகையினால் சூழல் சுகாதாரம் பேணுதல் என்பது தனிநபர் சுதந்திரம் பேணுதல் என்பதுடன் நின்றுவிட முடியாதது. ஆனால் தனிநபர் சுகாதாரம் பேணுதல் என்பதும் தனிநபரின் பொறுப்புமிக்க செயற்பாடு என்பதும் சமூகத்தின் சுகாதாரம் பேணுதலுக்கு அடிப்படையாகும்.

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கவுள்ளதாக கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

கட்சியிலிருந்து பிரிந்துசென்ற ஜனநாயகக்குழு உறுப்பினர்களை மீண்டும் கட்சியில் இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தில் விரைவில் மாற்றம் ஏற்படுத்தப்படும். ரணில்விக்கிரமசிங்க தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்பட்டால் மட்டுமே கட்சியை மீட்கமுடியும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

(திருமலை)

திருகோணமலை உப்புவெளியில் சிறிலங்காக் காவல்துறையினரும் இராணுவத்தினரும் இணைந்து நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதல்களில் ஐந்து தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை வேளையில் திருகோணமலை மாவட்டத்தில் சிறிலங்காவின் காவல்துறையினரும் இராணுவத்தினரும் இணைந்து தமிழர்கள் அதிகமாக வாழ்கின்ற உப்புவெளிக் கிராமத்தில் இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதலை நடாத்தியுள்ளனர்.

இவர்கள் உப்புவெளி காவல்நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுவருகின்றனர்.

# இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு தமிழீழத்தைத்தவிர வேறு தீர்வில்லை

## ம.தி.மு.க மாநில கொள்கை பரப்புச் செயலாளர்

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு தனித்தமிழீழத்தைத் தவிர வேறொன்றும் சரியான தீர்வாக இருக்கமுடியாது என்று ம.தி.மு.க கட்சியின் மாநிலக் கொள்கை பரப்புச் செயலாளர் சம்பத் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் இனப்படுகொலையைக் கண்டித்து ம.தி.மு.க சார்பில் அரசியல் விளக்கப் பொதுக்கூட்டம் நாகர்கோவிலில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உலக நாடுகள் அனைத்தும் போரை நிறுத்துங்கள் என்று வலியுறுத்துகின்றன. ஆனால் இந்தியா மட்டும் நேரடியாகப் போரை நிறுத்த வலியுறுத்துமாறு சொல்லவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சிறிலங்கா அரசு போர்நிறுத்தம் செய்ய வேண்டும்

# பிரணாப் முகர்ஜியின் கருத்துக்கு தமிழக முதல்வர் வரவேற்பாம்

(சென்னை)

விடுதலைப்புலிகள் போர்நிறுத்தித்திற்கு முன்வந்திருப்பதை ஏற்று சிறிலங்கா அரசும் போர்நிறுத்தத்திற்கு முன்வரவேண்டுமென இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்திருப்பதற்கு தமிழக முதல்வர் கருணாநிதி தனது வரவேற்பைத் தெரிவித்துள்ளார். தமிழகம் தூத்துக்குடியில் நிகழ்வு ஒன்றிற்கு கலந்துகொள்வதற்காகச் சென்ற முகர்ஜி அந்நிகழ்வில் உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். இதனைத் தமிழக முதல்வர் வரவேற்றுள்ளார். அத்துடன் இலங்கையில் தமிழ்மக்கள் அதிகாரத்துடன் வாழ்வதுதான் நோக்கம் என்றும் தமிழக முதல்வர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்படவுள்ளநிலையில் அடுத்த தேர்தலுக்கு காங்கிரஸ் தயாராவதன் விளைவுதான் முகர்ஜியின் இக் கருத்து என்றும் தமிழக மக்களின் ஈழத்தமிழர் தொடர்பான எழுச்சியைத் தணிக்கவும் தேர்தல் பலத்தைப் பெறும் நோக்கத்திலுமே அக்கருத்து வெளியிடப்பட்டிருக்கலாமெனத் தாம் கருதுவதாகவும் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் கருத்துத் தெரிவித்துள்ளது.

# சிறிலங்கா காவல்துறையினர் மீது யாத்திரிகர்கள் தாக்குதல்

(கொழும்பு)

சிறிலங்காக் காவல்துறையினர் மீது சிவனொளி பாதமலைக்குச் சென்றிருந்த யாத்திரிகர்கள் தாக்குதலை நடத்தியுள்ளனர். முல்கமுவச்சந்தியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த காவல்துறையினர் மீதே இவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு இடம்பெற்றதாகக் காவல்துறையின் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித்குணசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை தாக்குதலை இடைநிறுத்தவந்த உள்ளூர்வாசிகள் சிலரையும் யாத்திரிகர்கள் சிலர் தாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. காயமடைந்த உள்ளூர்வாசிகள் சிலர் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அதேவேளை சம்பவத்தில் காயமடைந்த காவல்துறையினர் மஸ்கெலிய மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## எறிகணை மற்றும் வான்குண்டுத்தாக்குதலில்

# கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 2018 பொதுமக்கள் படுகொலை

கடந்த இரண்டு மாதங்களில் சிறிலங்காப் படையினரின் எறிகணைத்தாக்குதல், வான்குண்டுத்தாக்குதல்களில் 2018 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களுள் 710 சிறுவர்களும், 728 இளைஞர்களுமாவர்.

தமிழ்மக்களை அழித்தொழிக்கும் இலக்குடன் சிறிலங்காப்படையினர் இந்தத் தாக்குதல்களை நடாத்தி மக்களை நாள்தோறும் படுகொலை செய்துவருகின்றனர். மக்கள் செறிவாக வாழ்ந்துவரும் பகுதிகள் மீது அகோரமான தாக்குதல்களை நாடாத்தி பாதுகாப்பு வலயங்களென சில பகுதிகளை அறிவித்து அவர்களை அப்பகுதிகளை நோக்கி இடம்பெரச்செய்து அப்பகுதிகளுக்குள் மக்கள் செறிவாகச் சென்றதும் பின்னர் அப்பகுதிகள் மீதும் அகோரமான எறிகணைத் தாக்குதல்களையும் வான்குண்டுத் தாக்குதல்களையும் படையினர் திட்டமிட்டு நடாத்திவருகின்றனர். படையினரின் இவ்வாறான தாக்குதல்கள்மூலமாகவே அதிகளவில் பொதுமக்கள் படுகொலையாகியுள்ளனர்.

இதேவேளை இதனைவிட மூன்று மடங்குக்கும் அதிகமான பொதுமக்கள் படுகாயங்களுக்குள்ளாகிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## சுத்தமான நீரையே பருகுவதற்கு பயன்படுத்துக

- குடிப்பதற்கு கொதித்தாறிய நீரை மட்டும் பயன்படுத்த வேண்டும்.
- சிறிய பிள்ளைகளுக்கு கொதித்தாறிய நீரை ஒரு கண்ணாடிப் போத்தலில் விட்டுப் பாவித்தல் வேண்டும். இதன்மூலம் நீரிலுள்ள தூசு, மண்டி போன்றவற்றை அடையாளம் கண்டுகொள்ளமுடியும்.
- கொதித்தாறிய நீரை அள்ளிப் பருகுவதற்கு எப்போதும் ஒரே சிறிய குவளையைப் பயன்படுத்தவேண்டும். அதனைச் சுத்தமான இடத்தில் வைத்திருத்தல்வேண்டும்.
- பொதுக்கிணறுகளில் பயன்படுத்தும் தண்ணீர் அள்ளும் வாளிகள் எவை என்பதை தீர்மானித்தல் வேண்டும். இதனால் சுத்தமான வாளிகளால் தண்ணீர் அள்ளுவதை உறுதிப்படுத்தமுடியும்.
- கிணற்றடியைச் சுற்றி தண்ணீர் தேங்காதவகையில் உயரமாக மண்போட்டு நிரப்புதல்வேண்டும். அத்துடன் தண்ணீர் தேங்காத வகையில் சீரான கால்வாய் அமைத்து கழிவுநீர் வெளியேறிச்செல்ல ஒழுங்கு செய்தல்வேண்டும்.

## காயமடைந்த பெண்ணின் காலில் வெடிக்காத கொத்துக்குண்டு

சிறிலங்காப் படையினரின் எறிகணைத்தாக்குதலில் காயமடைந்த பெண் ஒருவரின் காலில் வெடிக்காத நிலையில் கொத்துக்குண்டு ஒன்று இருந்துள்ளது. இவரது கால் துண்டிக்கப்பட்டு இந்தக் கொத்துக்குண்டு அகற்றப்பட்டுள்ளது. இதனால் இவர் காலை இழந்த நிலையில் உயிர் தப்பியுள்ளார்.

## சிறிலங்கா சனாதிபதி நேபாளம் பயணம்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ச நேற்றிரவு நேபாளம் புறப்பட்டுள்ளார்.

வர்த்தக மற்றும் பல நோக்கங்களைக் கருதியதாக இவரது விஜயம் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சார்க் நாடுகளில் ஒன்றாகிய நேபாளத்திற்கான பயணம் பிராந்திய நாடுகளுக்கான விஜயத்தின் ஒரு பகுதியெனவும் கூறப்படுகின்றது.

## சிறில.படையினரின் எறிகணை வீச்சில் 37 பேர் பலி 53 பேர் பருகாயம்

மாத்தளன் புதுக்குடியிருப்புப் பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்கள் வாழ்விடங்கள் மீது நேற்று சிறிலங்காப் படையினர் நடாத்திய எறிகணைத்தாக்குதலில் 37 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 53 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். படுகாயமடைந்தோரின் கிடைக்கப்பெற்றோரின் விபரம்,

அ.சுதர்சன் (வயது 15), அ.சத்தியரூபன் (வயது 13), ஆ.மிலி (வயது 68), நா.சதீஸ்வரன் (வயது 13), பா.நாகலிங்கம் (வயது 46), ரா.லலிதா (வயது 28), ஜெ.வசந்தகுமார் (வயது 25), ச.பாக்கியராஜா (வயது 58), க.ஜெயசீலன் (வயது 32), தே.சுகிலன் (வயது 23), பொ.ஜெசுராசா (வயது 56), நா.முருகரூபன் (வயது 15), ந.பெனடிற் (வயது 53), சிவபாலசுந்தரம் (வயது 49), இ.ராமகிஸ்ணன் (வயது 43), யோ.ரோகினி (வயது 25), ச.சந்திரலோகன் (வயது 47), தா.தியாகரூபன் (வயது 17), ந.சரஸ்வதி (வயது 46), சு.இராசலிங்கம் (வயது 48), ஜெ.ராதிகா (வயது 46), சி.சகீர்தா (வயது 8), இ.முருகானந்தன் (வயது 26), மி.அன்னலட்சுமி (வயது 58), வை.பாலசிங்கம் (வயது 49), க.இராமச்சந்திரன் (வயது 52), சி.அனுசா (வயது 29), அ.அனுஸ்ரனியா (வயது 3), பெ.பூபாலசிங்கம் (வயது 66), சி.பிரேமலதா (வயது 28), இ.அனுசா (வயது 17), ப.ஆனந்தன் (வயது 31) ஆனந்தபுரம், வ.கன்சன் (வயது 32), ர.கஜீவன் (வயது 13), த.நிர்மலா (வயது 13), த.தேவகுலன் (வயது 14), த.கருணானந்தம் (வயது 45), ம.இராஜி (வயது 26), க.டினேஸ் (வயது 15), த.தங்கேஸ்வரி (வயது 48), க. நித்தியானந்தன் (வயது 50), சோ.நிமலேந்திரன் (வயது 30), வி.பரமலா (வயது 27), ம.விதுசன் (வயது 14), ஜெ.மோகனா (வயது 31), அ.புஸ்பராஜா (வயது 21), பா.சசிதரன் (வயது 21), ம.ஜெயந்தினி (வயது 24), வ.சந்திரலேகா (வயது 56), சோ.சிவகுமார் (வயது 27), ஜெ.பகீரதன் (வயது 07) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

## கடலலையில் சிக்குண்டு மூன்று சிறார்கள் உயிரிழப்பு

கடலலையில் சிக்குண்டு மூன்று சிறார்கள் உயிரிழந்துள்ளனர். சிறிலங்கா அரசு பாதுகாப்பு வலயமென அறிவித்த மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய பகுதிகளில் செறிவாக கடற்கரையோரங்களில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ளனர். சிறார்கள் பெருமளவில் கடலோரங்களில் நடமாடித்திரிவதால் அலைகளில் சிக்குண்டு உயிரிழக்கும் பரிதாபநிலை ஏற்பட்டுள்ளது. சிறுவர்கள் கடற்கரைக்குச் செல்வதை பெற்றோர்கள் முடிந்தவரை கட்டுப்படுத்தவேண்டுமெனவும் வலியுறுத்தப்படுகிறது.

## புலிகளின் சிறிய கொமான்டோ அணிகள் படைநிலைகளுக்குள் ஊடுருவித் தாக்குதல்

### லக்பிம சிங்கள ஏடு தகவல்

விடுதலைப்புலிகளினுடைய சிறிய கொமான்டோ அணிகள் சிறிலங்காப் படைகளின் நிலைகளுக்குள் ஊடுருவி கடந்த ஒருவாரகாலமாக தாக்குதல்களை நடாத்திவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிங்கள நாளிதழான லக்பிமவில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் சிறிலங்காத் தரைப்படையினுடைய சிங்க ... தாகவும் இதில் ஊர்தி ஓட்டுநர் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் ஆனால் அதில் குறித்த மேஜர் பயணித்திருக்கவில்லையென்றும் அதனால் அவர் தப்பிவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வித்தியாதரனை விடுவிக்கக்கோரி

## வயிற்றோட்ட நோயினால்

கட்டுப்படுத்தவேண்டுமெனவும் வலியுறுத்தப்படுகிறது.

# வித்தியாதரனை விடுவிக்கக்கோரி தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்



கொழும்பில் சிறிலங்காக் காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் ந.வித்தியாதரனை விடுதலைசெய்யக்கோரி நேற்று தமிழகத்தில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. தமிழக தலைநகர் சென்னையிலுள்ள சிறிலங்கா துணைத் தூதரகத்தின் முன்னால் இந்தப் போராட்டம் நடாத்தப்பட்டது. இதன்போது சிறிலங்கா துணைத் தூதுவர் அம்சாவிற்கு எதிராகவும் மக்கள் உரத்துக் குரலெழுப்பினர்.

நத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிங்கள நாளிதழான லக்பிமவில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் சிறிலங்காத் தரைப்படையினுடைய சிங்க ரெயிஜிமன்ட் படைப்பிரிவிற்குள் விடுதலைப்புலிகளுடைய கொமாண்டோ அணி ஊடுருவித் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட ஏழு படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் ஏழு படையினர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை பதினொராவது கெமுனுவோர்ச் பட்டாலியனுடைய தளபதியான மேஜர் நிலை அதிகாரி ஒருவர் ஊர்தியில் சென்றுகொண்டிருந்தபோது விடுதலைப்புலிகளின் அணியைச்சேர்ந்த ஒருவர் தாக்குதலை நடத்திய

### படைக்கு...

தாக்குதலில் படுகாயமடையும் சிறிலங்காப் படையினருக்கு வழங்கப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# வயிற்றோட்ட நோயினால் 10 வயதுச் சிறுமி உயிரிழப்பு


வயிற்றோட்டம் காரணமாக 10 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். சிறிலங்கா அரசின் பாதுகாப்புப்பகுதி என அறிவித்த மாத்தளன், அம்பலவன் பொக்கணை , வலைஞர் மடம், முள்ளிவாய்க்கால் ஆகிய பகுதியில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் வயிற்றோட்டம் தீவிரமாகப் பரவியுள்ளது. இப்பகுதிகளில் நிலவும் கடும் வெப்பம் காரணமாகவே வயிற்றோட்டம் தீவிரமாகப் பரவிவருவதாக மருத்துவர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

### அதிகளவு...

அமெரிக்காவின் இந்த அறிக்கையின்மூலம் சிறிலங்காவின் மனித உரிமை மீறல்கள் தெட்டத்தெளிவாக புலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வீரச்சாவு அறிவித்தல்

**லெப். கேணல்**
**அருணன்/அருணா**
**அன்ரனி**
**ஜெனாட்டார்சன்**
**(சந்திரன்)**



**வீரச்சாவு**
**27.02.2009**

யாழ்.மாவட்டத்தை நிரந்தர முகவரியாகவும், இரட்டை வாய்க்கால் முல்லைத்தீவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட லெப்.கேணல் அருணன்/அருணா என்றழைக்கப்படும் அன்ரனி ஜெனாட்டார்சன் (சந்திரன்) அவர்கள் 27.02.2009 அன்று வீரச்சாவைத்தழுவிக்கொண்டார்.

இவர் அன்ரனி தங்கராணி மணஇணையரின் அன்பு மகனும், சுபோ/முல்லை (நிதித்துறைப் போராளி) யின் அன்புக் கணவரும், இராகவனின் பாசமிகு தந்தையும், குட்டி (லண்டன்), பாப்பா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்**
**மனைவி, மகன்**
**(போராளி சுபோ) இராகவன்.**

(17801)

### வீரவணக்கம்...

(தேவகுமார் சந்திரகுமார், திருமுலை மாவட்டம், த.மு-01 ஆம் ஒழுங்கை, இடைக்கட்டு வீதி, வள்ளிபுனம் புதுக்குடியிருப்பு, (முல்லைத்தீவு)

**லெப்.நகுலன்**
(கருணாகரன் கபிலன், மட்டு மாவட்டம்)

**கப்டன் மாறன்**
(சிவனொலிபாதம் மயூரன், வேரவில்,பூநகரி,கிளிநொச்சி, த.மு-வாகீசன் வீதி, சுதந்திரபுரம், உடையார்கட்டு, (முல்லைத்தீவு)
ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தவர்களாவர்.

24.01.2009 அன்று மூன்று போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**02 ஆம் லெப்.கானொழியன்**
(தம்பையா தேவநேசன், நட்டாங்கண்டல் மாங்குளம், முல்லைத்தீவு, த.மு-சுதந்திரபுரம் பாடசாலை முன்பாக, உடையார்கட்டு (முல்லைத்தீவு)

**கப்டன் அன்பழகி**
(குஞ்சையா உதயஜசித்திரா, கறுக்காய்த்தீவு, பூநகரி, கிளிநொச்சி, த.மு-100 வீட்டுத்திட்டம், சுதந்திரபுரம் உடையார்கட்டு (முல்லைத்தீவு)

**02 ஆம் லெப். தூயமதி**
(முத்தையா சுமதி, நயினாமடு, நெடுங்கேணி, வவுனியா)
ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தவர்களாவர்.

24.01.2009 அன்று போருதவிப்படைவீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**போருதவிப்படை வீரர் கோணேஸ்வரபாலன்**
(செல்வராசா கோணேஸ்வரபாலன், வசந்தம் வீதி, வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு) என்ற போருதவிப்படை வீரரே வீரச்சாவடைந்துள்ளவர் ஆவார்.

25.01.2009 அன்று தமிழீழத் தேசிய இராணுவவீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**தமிழீழ தேசிய இராணுவம் வீரவேங்கை சின்னத்தம்பி**
(வைரமுத்து சின்னத்தம்பி,பசீலன் வீதி,03 ஆம் வட்டாரம் முள்ளியவளை முல்லைத்தீவு, த.மு-அ பகுதி தேவிபுரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு) என்ற தமிழீழ தேசிய இராணுவவீரரே வீரச்சாவடைந்தவராவார்.

இம்மாவீரர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### வித்தயாசமான....

ளைவிட நேற்று சற்று வித்தியாசமான குண்டுகளை ஏவியுள்ளனர். இந்த குண்டுவிழுந்த இடம் அரைமணி நேரத்திற்கு மேலாக எரிந்துகொண்டிருந்தது. பல குடிசை வீடுகள் இந்தக் குண்டினால் எரிந்தே அழிந்துள்ளன. குண்டு வீசப்பட்ட இடத்திலிருந்த சடலங்கள் அனைத்தும் கருகிய நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர். அனைவரும் எரிகாயங்களுக்குள்ளாகியிருந்தனர்.

முன்பு எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கும் இடங்களில் குண்டுச்சிதறல்களால் ஏற்பட்ட காயங்களே ஏற்பட்டிருக்கும். ஆனால் நேற்று வீசப்பட்ட குண்டில் அகப்பட்ட அனைவரும் எரிகாயங்களுக்குள்ளாகியிருந்தனர். இது ஒரு வித்தியாசமான இரசாயனக்குண்டு என்றே நான் நினைக்கின்றேன்.

இந்தக் குண்டுகள் வீசப்பட்ட பகுதி சிறிலங்காப் படையினரால் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட பகுதியாகும். இங்கு கிட்டத்தட்ட நான்கு லட்சம் வரையான மக்கள் வாழ்கின்றனர். இதனாலேயே பெருமளவானோருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளன.

கடந்த ஐந்து மாதங்களாக சத்திரசிகிச்சைக்குத் தேவையான மருந்துப் பொருட்கள் சிறிலங்கா அரசினால் அனுப்பப்படவில்லை. மயக்கமருந்து இல்லை. இதனால் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிப்பதில் நாங்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றோம். சிறு காயங்களுக்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சையளிக்க போதிய வசதியின்மையாலேயே அவர்கள் உயிரிழக்கும் நிலை ஏற்படுகின்றது.

இது தொடர்பாக சுகாதார செயலர் உட்பட எமது மேலதிகாரிகளுக்கு பலமுறை தெரியப்படுத்தியுள்ளோம். எனினும் இவர்களிடமிருந்து எதுவிதமான சாதகமான பதிலும் கிடைக்கவில்லை.

இங்கு சிகிச்சைக்கு வருவோருக்கு ஐந்து வகையான மருந்துகள் வழங்கவேண்டியதற்குப் பதிலாக இரண்டு வகையான மருந்துகளையே வழங்குகின்றோம். இதனால் சிகிச்சை பெற்றுச் செல்வோர் குணமடையாது மீண்டும்வரும் நிலை ஏற்பட்டுள்ளது எனறும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை ஈழநாதம் பணிமனையில் 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.